**ஏ.டீ.எம். Any Time Murder**

**அகிலன் சித்தார்த்**

**16**

முஸ்தஃபா, வீட்டு வாசலில் ஆட்டோவில் வந்து இறங்கினான். வாசலில் இருந்த சிறிய திண்ணையில் காஜா தைத்துக் கொண்டிருந்த சித்தப்பா, அவன் ஏகப்பட்ட பைகளுடன் வந்து இறங்குவதை ஆச்சரியமாகப் பார்த்தார். ஆனால் ஏதும் கேட்காமல் தன் தையல் வேலையில் ஈடுபட ஆரம்பித்தார். அவருடைய வழக்கமே அதுதான். எதற்கும் எப்போதும் பேச மாட்டார். வாழ்க்கையின் மோசமான அனுபவங்கள் அவரை ஊமையாகவே ஆக்கிவிட்டன.

முஸ்தஃபா உள்ளே நுழைந்ததுமே சாகுல், அன்வர், மாலிக் மூன்று பேரும் சூழ்ந்து கொண்டார்கள். வாப்பா வழக்கம் போல் தரையில் அமர்ந்து ஏதோ எழுதிக் கொண்டிருந்தார். "வாப்பா... உங்களுக்கு சூப்பரா டேபிள் ஆர்டர் பண்ணியிருக்கேன்.. கொஞ்ச நேரத்துல வந்துரும்.." என்றான். சித்தி ஜாஹிரா மணக்கமணக்க கோழிக் குழம்புசெய்திருந்த வாசனை வீட்டைச் சுற்றி சுற்றி வந்தது.

"கோழி அடிச்சீங்களா சித்தி.. இங்கே பாருங்க.. உங்களுக்காக பர்தா வாங்கியிருக்கிறேன்... புடவை வாங்கியிருக்கேன்.. வேற என்ன வாங்கணும்னு தெரியலை.." என்று சொல்லியபடி அவளிடம் பர்தா, சேலைகளைக் கொடுத்தான். அவள் முதலில் பர்தாவின் இழைகளை விலக்கி என்ன விலை என்று பார்த்தாள். அயர்ந்து போனாள். இத்தனை விலை கொடுத்து அவள் பர்தா வாங்கியதே இல்லை. சாட்டின் போல் அது வழவழப்பாக இருந்தது. அதை ஆசையுடன் தடவிப் பார்த்தாள்.

"முஸ்தஃபா.. விலை ரொம்ப அதிகம் போல இருக்கே..?"

"இருக்கட்டும் சித்தி.. எங்களுக்காக எவ்வளவு உழைக்கறீங்க... இதெல்லாம் ஒன்னுமே இல்லை.." என்றான். அப்போது சித்தியின் கண்களில் இருந்து சில கண்ணீர்த் துளிகள் விழுந்ததை யாருமே கவனிக்கவில்லை.

சிறுவர்கள், முஸ்தஃபா வாங்கி வந்திருந்த ஆடைகளை ஆசையுடன் அணிந்து கொண்டார்கள். ஷூக்களை அணிந்து வீட்டுக்குள்ளேயே வலம் வந்தார்கள். வாப்பா ஏதும் பேசவில்லை. மார்க்க புத்தகம் ஒன்றை அமைதியாகப் படித்துக் கொண்டிருந்தார். முஸ்தஃபா பணம் அடங்கிய பையை அலமாரியின் அருகே இருந்த சிறிய பீரோவின் பின்னால் மறைத்து வைத்தான். அதில் இன்னும் ஒரு லட்சத்து தொண்ணூறாயிரம் ரூபாய் இருந்தது. அதைப் பற்றி நினைக்கும்போதே முஸ்தஃபாவுக்கு உற்சாகமாக இருந்தது.

ஆனாலும் யதார்த்தம் அவனுக்குப் புரிந்திருந்தது.

